# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 121 மற்றும் 122/மா/2018**

**ஆணை எண். 135/2018**

**நாள் : 06/06/2018**

**திரு T. சவரிமுத்து,
தஞ்சாவூர்**

**திரு R. குழந்தை ராஜ்,
தஞ்சாவூர்.**

– **முறையீட்டு மனுதாரர்**

**மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.**

– **எதிர் மனுதாரர்**

தஞ்சாவூர், E.B. காலனி, 4–வது தெரு, எண்.179, கல்யாணசுந்தரம் நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு T. சவரிமுத்து (1), தஞ்சாவூர், எண்.36, சிவாஜி நகர் புதுத் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு R. குழந்தைராஜ் (2) ஆகியோரின் 31.05.2018 நாளிட்ட முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 121/2018 மற்றும் 122/2018 எண்களிட்ட முறையீட்டு மனுக்களாகப் பதிவு செய்யப்பட்டன. முறையீட்டு மனுதாரர்களின் மனுக்கள் மற்றும் அவர்கள் தாக்கல் செய்த பிற ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தஞ்சாவூர் மாநகராட்சிப் பகுதியில் வசிக்கும் திருவாளர்கள் T. சவரிமுத்து மற்றும் R. குழந்தைராஜ் ஆகிய இருவரும் தஞ்சாவூர் மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றி, 2008–ஆம் ஆண்டில் பணி ஒய்வு பெற்றதாகவும், மேற்குறிப்பிட்ட பணியிடத்தில் சிறப்பு நிலையில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி ஒய்வு பெற்றுள்ள தங்களுக்கு ஒரு மிகுதி ஊதிய உயர்வு ( Bonus Increment ) வழங்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளனர்.

2. மிகுதி ஊதிய உயர்வு வழங்கக்கோரும் மனுதாரர்களின் கோரிக்கைக் குறித்த கருத்துருவில் தனியர்கள் ஒரே பணியிடத்தில் 30 ஆண்டுகள் பணியாற்றியிருக்கவேண்டும் என்ற நிபந்தனையை தனியர்கள் துப்புரவு ஆய்வர் பணியிடத்தில் நிறைவு செய்யாத காரணத்தினால், மேற்குறிப்பிட்ட ஊதிய உயர்வு தனியர்களுக்கு வழங்க வாய்ப்பு எழவில்லை என்ற கருத்தினை உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையின் உதவி இயக்குநர் தனது 25645/2015 எண்ணிட்ட கடிதங்களில் தெரிவித்துள்ளார். மேலும், ஊதிய உயர்வு வழங்குதல் தொடர்பான நடவடிக்கை முற்றிலும் நிர்வாகத் தொடர்புடையதால், இப்பொருள் குறித்து நிர்வாகத் தலைமையிடத்திடம் தெளிவுரை பெறுமாறும் தனியர்களுக்கு 16.03.2018 நாளிட்ட

உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை உதவி இயக்குநரின் கடிதம் எண்.32065/2017–இல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வறிவுறுத்தலைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரும் தனது 17.04.2018 நாளிட்ட கடிதம் எண்.9050/2016–இல் இந்நேர்வு சம்பந்தமாக விரிவான குறிப்புரையினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பிடும் பொருட்டு தனியர்கள் மேற்படி ஊதிய உயர்வு பெற தகுதியானவர்களா என்பதை முடிவு செய்யுமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் கோரப்பட்டுள்ளார்.

3. இந்நிலையிலேயே முறையீட்டு மனுதாரர்கள் இம்முறைமன்ற நடுவத்திலும் முறையீடு செய்துள்ளனர். முறையீட்டு மனுதாரர்களின் மிகை ஊதிய உயர்வுக்கானக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. முறையீடு செய்துள்ளவர்களுக்கு பிற தீர்வுகள் கிடைக்கத் தக்கதாக இருக்கும் பொழுது மற்றும் வழக்கின் சூழ்நிலைகளின் நோக்கில் அத்தகைய தீர்வுகளைப் பெறுவது முறையீடு செய்துள்ளவர்களுக்கு அதிகப்படியான நலனைத் தரக்கூடியதாக இருக்கும் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரும் இந்நேர்வு சம்பந்தமாக உரிய தெளிவுரையினை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் பெறுமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையின் இயக்குநர் கோரப்பட்டுள்ள நிலையில், இது சம்பந்தமாக இம்முறைமன்ற நடுவத்தால் எந்தவொரு நடவடிக்கையினையும் மேற்கொள்ள இயலாது எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடுகிறது. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்தினைப் பெற்றவுடன் இந்நேர்வு சம்பந்தமான நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளுமாறும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 6–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 7/6/18

7.6.18

7/6/18

பெறுநர்

1. திரு T. சவரிமுத்து,
எண். 179, கல்யாண சுந்தரம் நகர்,
4–வது தெரு, E.B. காலனி,
தஞ்சாவூர்.

2. திரு R. குழந்தை ராஜ்,
36, சிவாஜி நகர்,
புதுத்தெரு, தஞ்சாவூர்.

3. மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி, தஞ்சாவூர்.

4. இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்ககம்,
ஒருங்கிணைந்த நிதித் துறை அலுவலக வளாகம்,
நந்தனம், சென்னை – 35.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி